Australian Government
Services Australia

TAMIL

# பணம் சம்பந்தப்பட்ட உங்களுடைய விடயங்களைத் திறமையாக நிர்வாகம் செய்யுங்கள்

உங்களுடைய பணத்தை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பது உங்களுடைய வாழ்க்கையில் மாறக்கூடும். உங்களுடைய வாழ்க்கையின் வெவ்வேறு காலங்களில் பணம் சம்பந்தப்பட்ட உங்களுடைய விடயங்களை நிர்வாகம் செய்வதற்கு உதவும் தகவல்கள் எம்மிடம் உள்ளன.

## வரவு-செலவுக் கணக்கு ஒன்றைத் திட்டமிடல்

நீங்கள் படித்துக்கொண்டோ, பயிற்சி பெற்றுக்கொண்டோ இருந்தால், வேலை தேடிக்கொண்டிருந்தால், உங்களுடைய ஓய்வு-காலத்திற்காகத் திட்டமிட்டுக்கொண்டிருந்தால், அல்லது உங்களுடைய குடும்ப நிதி விவகாரங்களை ஒழுங்குசெய்ய விரும்பினால், வரவு-செலவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதிலிருந்து அப்படிப்பட்ட காரியங்களைத் துவங்குவது நல்லது.

உங்களுடைய பணத்தை நீங்கள் எவ்வாறு செலவிடுகிறீர்கள் என்பதைக் கண்காணித்து வருவதில் வரவு-செலவுத் திட்டம் ஒன்று உங்களுக்கு உதவக்கூடும். உங்களுடைய கட்டணங்களைச் செலுத்திய பிறகும், உங்களுடைய செலவுகளுக்குப் பிறகும் உங்களிடம் எவ்வளவு பணம் எஞ்சியிருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளவும் இதனால் உங்களுக்கு உதவ இயலும். உங்களுடைய வரவு-செலவுத் திட்டத்தை எளிதானதாக வைத்திருங்கள், மற்றும் அடிக்கடி அதைச் சரிபார்த்துவாருங்கள்.

உங்களுக்கு எவ்வளவு பண வருமானம் வந்துகொண்டிருக்கிறது என்பதைப் பார்ப்பதிலிருந்து உங்களுடைய செயல்பாட்டினைத் துவங்குங்கள். சம்பளத் துண்டுகள், வங்கி அறிக்கைகள், மற்றும் Centrelink Deduction statement (‘செண்ட்டர்லிங்க் பணக்-கழிப்பு அறிக்கை’) ஆகியன உங்களுக்கு இருந்தால், அவற்றைப் பாருங்கள்.

அதற்குப் பிறகு எவ்வளவு பணத்தை நீங்கள் செலவு செய்கிறீர்கள் என்று பாருங்கள். பின் வருவனவற்றைப் பாருங்கள்:

- கட்டணச் சீட்டுகள்
- 'க்ரெடிட் கார்டு' அறிக்கைகள்
- வாராந்திர உணவுப்பொருள் செலவுகள் போன்றவற்றிற்கான இரசீதுகள் மற்றும் பற்றுச்சீட்டுகள்
- ஒரு முறை மட்டுமே நீங்கள் செய்யவேண்டிய, வரவிருக்கும் செலவுகள்
- காப்பீடு மற்றும் வாகனப் பதிவு போன்ற வருடாந்திரக் கட்டணங்கள்.

உங்களுடைய பணத்தினை நீங்கள் எப்படிச் செலவு செய்கிறீர்கள் என்பதைக் கணக்கிட்டுத் தெரிந்துகொள்வது நீங்கள் பணத்தை எதிலெல்லாம் சேமிக்கலாம் என்பதைத் தெரிந்துகொள்ள உதவும்.

உங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் ஒரு மாற்றமானது உங்களுடைய வரவு-செலவுத் திட்டத்தினைப் பாதிக்கக்கூடும். உங்களுடைய வரவு-செலவுத் திட்டம் இப்போதும் உங்களுக்கு ஏற்றதாகவே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதைத் தவறாமல் அவ்வப்போது நீங்கள் மீள்பார்வையிட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## பணத்தைச் சேமிப்பதற்கான இலக்குகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்

அவசரகால செலவுகளுக்காக, அல்லது விலையுயர்ந்த பொருள் ஒன்றை வாங்குவதற்காக பணத்தை ஒதுக்கி வைக்க உதவுவதற்கான சேமிப்புத் திட்டம் ஒன்றை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

பின் வரும் காரியங்களைச் செய்தால், சேமிப்பிற்கான உங்களுடைய இலக்குகளை உங்களால் அதி விரைவாக அடைய இயலுமாகலாம்:

- உண்மையில் உங்களுக்குத் தேவையில்லாத பொருட்களை வாங்குவதை நிறுத்துங்கள்
- பொருட்கள் வாங்கும் பொழுது, 'க்ரெடிட் கார்டு'-ஐப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ரொக்கப் பணத்தை அல்லது உங்களுடைய 'டெபிட் கார்டு'-ஐப் பயன்படுத்துங்கள்.

## பணத்தை நீங்கள் எவ்வாறு சேமிக்கலாம்

பனம் சம்பந்தப்பட்ட உங்களுடைய விவகாரங்களை நிர்வகிக்க உங்களுக்கு உதவும் தகவல்கள் Moneysmart வலைத்தலத்தில் உள்ளன.

உங்களுடைய வரவு-செலவுத் திட்டம் மற்றும் சேமிப்பு இலக்குகளில் உங்களுக்கு உதவும் வழிகள் சில இங்கே தரப்பட்டுள்ளன:

- மிகச் சிறந்த பேரம் எது என்பதைத் தெரிந்துகொள்வதற்கான தேடல்களை மேற்கொள்ளுங்கள். வீட்டு அடமானக் கடன் அல்லது மின்சார சேவை வழங்குநர் ஆகியோரை மாற்றுவதைப் பற்றி நீங்கள் யோசித்துக்கொண்டிருந்தால், இப்போது உங்களுக்கு ஆவதை விட இன்னும் குறைந்த செலவில் அந்த சேவைகள் கிடைக்குமா என்று கேளுங்கள். எவ்வளவு பணத்தை உங்களால் சேமிக்க இயலுகிறது என்ற வியப்பு உங்களுக்கு ஏற்படும்.
- 'கட்டணம் இல்லா' கணக்குகளைப் பற்றி உங்களுடைய வங்கி அல்லது 'க்ரெடிட் யூனியன்'-ஐக் கேளுங்கள். வருமான ஆதரவுதவிக் கொடுப்பனவு ஒன்றை நீங்கள் பெற்றுவந்தால், கட்டணம் இல்லாத சேமிப்புக் கனக்கு ஒன்றை உங்களால் வைத்துக்கொள்ள இயலுமாகலாம்.
- காகித வடிவிலான கட்டணச் சீட்டுகள் அல்லது அறிக்கைகள் ஆகியவற்றிற்காக பல நிறுவனங்களும், வங்கிகளும் கட்டணங்கள் வசூலிக்கும். இவற்றை நீங்கள் இணையம் மூலமாகப் பெறும் தெரிவினை மேற்கொண்டால் உங்களால் பணத்தை மிச்சப்படுத்த இயலலாம்.

- கடன்களுக்காக விண்ணப்பிக்கும் பொழுது கவனமாக இருங்கள். வெவ்வேறு விதமான கட்டணங்கள், வசூலிப்புகள் மற்றும் வட்டி வீதங்கள் அகியவற்றைக் கொண்ட பல விதமான கடன்கள் மற்றும் 'க்ரெடிட்'டுகள் உள்ளன.

## நியாயமான, மற்றும் கட்டுபடியாகக் கூடிய வங்கி சேவைகள் மற்றும் கடன்களைப் பெறுங்கள்

- Good Shepherd-இல் இருந்து No Interest Loan (‘வட்டியில்லாக் கடன்’) ஒன்றைப் பெறுவதற்காக நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்று பாருங்கள். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற, பாதுகாப்பான, நியாயமான மற்றும் கட்டுபடியாகக் கூடிய கடன்களை இவை வழங்குகின்றன.
- ‘Saver Plus’ என்பது சேமிப்பு மற்றும் நிதி விவகாரங்களைப் பற்றிய கல்வித் திட்டமாகும். ஒவ்வொரு மாநிலத்திலும், எல்லைப் பிரதேசத்திலும் உள்ள சமூக அமைப்புக்களினால் இத் திட்டம் அளிக்கப்படுகிறது **bsl.org.au** எனும் வலைத்தலத்தில் இதைப் பற்றி இன்னும் வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள்.
- நீங்கள் மேல்-படிப்புப் படிக்கும் மாணவ-மாணவியாக இருந்தால், எமது Student Start-up Loan-இற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும்.

## உதவி பெறுங்கள்

உங்களுடைய பண விடயங்களை நிர்வகிக்க உங்களுக்கு உதவுவதற்கான சாதனங்களும் சேவைகளும் உள்ளன.

- Centrepay என்பது, உங்களுடைய Centrelink கொடுப்பனவுகளிலிருந்து உங்களுடைய கட்டணங்களைச் செலுத்துவதற்காக அவ்வப்போது தவறாமல் பணத்தைக் கழித்துக்கொள்வதற்காக நீங்கள் பயன்படுத்த இயலுமான இலவச மற்றும் சுயவிருப்பின் அடிப்படையிலான ஒரு சேவையாகும்.
- வாராந்திரக் கொடுப்பனவுத் தெரிவு என்பது உங்களுடைய வருமான ஆதரவுதவிக் கொடுப்பனவை நீங்கள் வாரத்திற்கு ஒரு முறை பெற உங்களுக்கு ஏது செய்கிறது. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை என்ற கணக்கில் கொடுப்பனவை நிர்வகிப்பது உங்களுக்கு சிரமமாக இருந்தால், இது உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும். Family Tax Benefit கொடுப்பனவு வராந்திர அடிப்படையில் கொடுக்கப்பட இயலாது.
- நீங்கள் தகுதி பெறுவீர்களேயானால், உங்களுடைய Family Tax Benefit அல்லது Carer Allowance-ஐ offset செய்யுமாறு நீங்கள் கேட்கலாம். உங்களுடைய Family Tax Benefit அல்லது Carer Allowance உங்களுடைய வருமான ஆதரவுதவிக் கொடுப்பனவு கொடுக்கப்படும் வாரத்தில் கொடுக்கப்படாமல் வேறொரு வாரத்தில் கொடுக்கப்படும் என்பதை இது குறிக்கும்.
- Rent Deduction Scheme என்பது பயனுள்ள, பாதுகாப்பான மற்றும் இலவசமான ஒரு சேவையாகும். உங்களுடைய மாநில அல்லது எல்லைப் பிரதேச வீட்டு வசதி ஆணையத்திற்கு வீட்டு வாடகையைத் தவறாமல் அவ்வப்போது உங்களுடைய Centrelink கொடுப்பனவுகளிலிருந்து நீங்கள் செலுத்தும் வசதியை இது அளிக்கிறது.

- கட்டணம், கடன் அல்லது வீட்டு அடமானக் கடன் ஒன்றைச் செலுத்துவதில் நீங்கள் சிரமப்பட்டுக்கொண்டிருந்தால் உங்களுடைய வங்கி அல்லது சேவை வழங்குநருடன் பேசுங்கள். பெரும்பாலான சேவை வழங்குநர்களிடம் உதவியளிக்கக் கூடிய இன்னல்-கால உதவி அணியினர் இருப்பார்கள். உங்களுடைய சூழ்நிலையைப் பொறுத்து, நீங்கள் செலுத்தவேண்டிய கடன் தொகைகளைத் தாமதப்படுத்தவோ, குறைக்கவோ, தள்ளுபடி செய்யவோ இவர்களால் இயலுமாகலாம்.

## யாராவதொருவருடன் பேசுங்கள்

- எமது Financial Information Service Officers ('நிதி-சார் தகவல் சேவை அலுவலர்கள்') உடன் பேசுங்கள். உங்களுடைய நிதி விவகாரங்களைப் பற்றிய முடிவுகளை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவுவதற்கான இலவச மற்றும் இரகசியக் கல்வியை எமது அலுவலர்கள் உங்களுக்கு அளிப்பர்.
- சிரமமான காலங்களில் அறிவுரையாலோசணை, ஆதரவுதவி மற்றும் தகவல்களை நீங்கள் பெறுவதில் எமது சமூக சேவகர்களால் உங்களுக்கு உதவ இயலும். மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவையா என்பதை எமக்குத் தெரிவியுங்கள், ஒருவரை நாங்கள் இலவசமாக ஏற்பாடு செய்வோம்.
- உங்கள் உள்ளூர்ப்-பகுதியிலுள்ள நிதி விவகார ஆலோசகர் ஒருவரை **ndh.org.au** எனும் வலைத்தலம் மூலமாக நீங்கள் கண்டறியலாம்.

## மேலதிகத் தகவல்களுக்கு

- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றி உங்கள் மொழியில் எம்முடன் பேச
**131 202**-ஐ அழையுங்கள்.
- ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/manageyourmoney** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்
- உங்கள் மொழியிலுள்ள தகவல்களை வாசிக்க, செவிமடுத்துக் கேட்க, அல்லது காண **servicesaustralia.gov.au/yourlanguage** எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ‘13’ இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகளுக்கு நிலைப்படுத்தப்பட்ட வீதத்திலான கட்டணம் ஒன்றை உங்களுடைய தொலைபேசிச் சேவை வழங்குநர் அறவிடக்கூடும். ஆஸ்திரேலியாவில் உள்ள எவ்வொரு இடத்திற்கும் இது பொருந்தும், மற்றும் உங்களுடைய தொலைபேசிச் சேவை வழங்குநரைப் பொறுத்து இந்த வீதம் மாறுபடக்கூடும். உங்களுடைய வீட்டுத் தொலைபேசியிலிருந்து ‘1800’ இலக்கங்களுக்குச் செய்யப்படும் அழைப்புகள் இலவசம். பொதுத் தொலைபேசி ஒன்றிலிருந்து நீங்கள் அழைப்பீர்களேயானால், தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் உங்களுடைய அழைப்பிற்கு ஆகும் நேரத்தைக் கணக்கிட்டு அதியுயர் வீதத்திலான கட்டணம் ஒன்றை அறவிடக்கூடும்.

## பொறுப்புத்துறப்பு

இந்த வெளியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களானவை கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமேயாகும், மற்றும் 25 ஜனவரி 2022 அன்றைய நிலவரப்படி அவை சரியானவை. மிகச் சமீபத்திய தகவல்களுக்குத் தயவு செய்து எமது வலைத்தலத்தினைப் பாருங்கள். உங்களுடைய குறிப்பிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில், கொடுப்பனவு ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்கான முடிவினை மேற்கொள்வது உங்களுடைய பொறுப்பு.

# Manage your money

How you use your money can change during your life. We have information to help you manage your money at different times in your life.

## Planning a budget

If you are studying or training, looking for work, planning for retirement or want to sort out your household finances, making a budget is a good place to start.

A budget may help you to track your spending. It can also help you work out how much money you have after paying bills and expenses. Keep your budget simple and check it often.

Start by looking at how much money you have coming in. Look at payslips, bank statements, and your Centrelink Deduction statement (if you have one).

Then, work out how much you are spending. Look at:

- bills
- credit card statements
- receipts and shopping dockets, like weekly food costs
- one-off expenses that you know are coming up
- annual bills, like insurance and car registration.

Working out how you spend your money can help you see where you can save money.

A change in your life can affect your budget. Remember to review your budget regularly to make sure it is still working for you.

## Set savings goals

You can make a savings plan to help put away money for an emergency, or to buy an expensive item.

You may be able to reach your savings goals quicker if you:

- cut back on buying things you don’t really need
- use cash or a debit card instead of your credit card when shopping.

## How you can save

The Moneysmart website has information to help you manage your money.

Here are some ways to help with your budget and savings goals:

- Research to find the best deal. If you are looking for a mortgage or thinking about changing electricity provider, ask for a better deal. You may be surprised at how much you can save.
- Ask your bank or credit union about ‘fee free’ accounts. If you get an income support payment, you may be able to get a savings account that will not charge fees.

- Many companies and banks charge for paper bills or statements. You could save money if you choose to get these online.
- Be careful applying for loans. There are many types of loans and credit with different fees, charges and interest rates.

## Get fair and affordable banking and loans

- Check if you qualify for a No Interest Loan from Good Shepherd. These loans provide safe, fair and affordable credit for essential goods and services.
- 'Saver Plus' is a savings and financial education program. It is offered by community organisations in every state and territory. Read more about it at **bsl.org.au.**
- If you are a higher education student, you may be eligible for our Student Start-up Loan.

## Get help

There are tools and services to help you manage your money.

- Centrepay is a free and voluntary service you can use to pay bills as regular deductions from your Centrelink payments.
- The weekly payment option allows you to get your income support payment weekly. This can help if you find it hard to budget on a fortnightly payment. Family Tax Benefit payment can not be paid weekly.
- If you are eligible, you can ask for your Family Tax Benefit or Carer Allowance payment to be offset. This means your Family Tax Benefit or Carer Allowance payment can be paid on a different week to your income support payment.
- The Rent Deduction Scheme is a useful, secure and free service. It lets you pay your state or territory housing authority rent as regular deductions from your Centrelink payments.
- Speak to your bank or service provider if you have trouble paying a bill, loan or mortgage. Most will have a hardship team who can help. They may be able to delay, reduce or waive debt repayments, depending on your situation.

## Speak to someone

- Talk to our Financial Information Service Officers. Our officers provide a free and confidential education service to help you understand decisions about your finances.
- Our social workers can help you with counselling, support and information during difficult times. Let us know if you need an interpreter, and we will arrange one for free.
- You can find a financial counsellor in your area at **ndh.org.au**.

## For more information

- Call **131 202** to speak with us in your language about Centrelink payments and services.
- Go to **servicesaustralia.gov.au/manageyourmoney** for more information in English
- Go to **servicesaustralia.gov.au/yourlanguage** to read, listen to or watch information in your language.

Your phone provider may charge you a fixed rate for calls from your home phone to ‘13’ numbers. This is from anywhere in Australia and the rate may vary depending on your phone provider. Calls to ‘1800’ numbers from your home phone are free. Phone providers may time your call and charge a higher rate if you call from a public or mobile phone.

## Disclaimer

The information contained in this publication is a guide to payments and services only, and is correct as of 25 January 2022. Please check our website for the most current information. It is your responsibility to decide if you wish to apply for a payment based on your particular circumstances